2018 ஜூன் 25]

மயிலாடுதுறை தொகுதியில் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் சுமார் 2,000 மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். சுமார் 400 மாணவியர்கள் மட்டுமே இந்தக் கல்லூரி விடுதியில் தங்கி கல்வி பயில்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த விடுதியில் கூடுதலாக மாணவியர்கள் தங்கி, கல்வி பயில அனுமதி வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. விதி 110—ன்கீழ் அறிக்கை

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம் அமைத்தல், சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கூடுதல் தளங்கள் கட்டுதல், கும்பகோணம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மையம் அமைத்தல், காஞ்சிபுரம், நீலகிரி மற்றும் நாகை மாவட்டங்களில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவியர் விடுதிகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான மருத்துவ சேவையை அனைத்து மக்களும், குறிப்பாக ஏழையெளிய மக்கள் பெற்றிட வேண்டுமென்ற அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், நடப்பாண்டில், மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்படவிருக்கும் புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் வெளியிடுகிறேன்.

1. இன்றைய காலகட்டத்தில், வாழ்க்கை முறை மாற்றத்தினால் ஏற்படுகின்ற தொற்றா நோய்களைத் தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், யோகா மற்றும் இயற்கை மருத்துவம் பெரும் பங்கு வகிக்கிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழ்நாட்டில் சர்வதேச தரத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தை ஊக்குவிக்கும்பொருட்டு, உலகத்தரம் வாய்ந்த (மேசையைத் தட்டும் ஒலி) "சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம்" செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 60 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு பட்டப் படிப்பு பிரிவு, பட்ட மேற்படிப்புப் பிரிவு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுடன்கூடிய மருத்துவமனை, மாணவர் விடுதிகள், பணியாளர் குடியிருப்புகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டு, இதற்குத் தேவையான பணியாளர்களும் நியமனம் செய்யப்படுவார்கள். இங்கே இயற்கையான சூழ்நிலையில், மிகவும் பாதுகாப்பான சிகிச்சை முறைகளான யோகா சிகிச்சை, இயற்கை உணவு சிகிச்சை, நீர் சிகிச்சை, அக்குபங்க்சர், அக்குபிரஷர், காந்த சிகிச்சை, இயற்கை மூலிகை சிகிச்சை, மண் சிகிச்சை, மசாஜ் சிகிச்சை, நிற சிகிச்சை போன்ற பல சிகிச்சைகள் அளிக்கப்படும்.

2. தமிழ்நாட்டிலுள்ள 985 துணை சுகாதார நிலையங்கள், ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்களாக 82 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2018 ஜூன் 25] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

3. சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனைத்து சிறப்புத் துறைகளும் ஒரே அடுக்குமாடிக் கட்டடத்தில் செயல்படும் வகையில், தற்போது கட்டப்பட்டுள்ள சிறப்பு அடுக்குமாடிக் கட்டடத்தில், 4–வது தளம் முதல் 6–வது தளம் வரை, மேலும் மூன்று தளங்கள் 55 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், நோயாளிகளின் வசதிகளைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள வெளி நோயாளிகள் பிரிவுக் கட்டடத்திலேயே அனைத்துத் துறைகளும் செயல்படும்விதத்தில், தற்போது கட்டப்பட்டுவரும் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடத்திற்குமேல், 5–வது தளம் முதல் 8–வது தளம் வரை, மேலும் நான்கு தளங்கள், 42 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சீர்காழி, திருத்தணி, ஓமலூர், திருச்செந்தூர், பரமக்குடி, பண்ருட்டி, ஆரணி ஆகிய அரசு வட்ட மருத்துவமனைகளுக்கு பெருகிவரும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்திட, 30 கோடி ரூபாய் செலவில் தரை தளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைக்காக, "பிரேக்கி" தெரப்பியுடன்கூடிய "சி.டி. ஸ்டிமுலேட்டர்" மற்றும் "பங்க்கர்" கருவிகள் 22 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைத்திட, "தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முற்பகல் 11–15

இத்திட்டத்தின்கீழ், 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 25 மாவட்ட மருத்துவ தலைமை மருத்துவமனைகள் மற்றும் 19 வட்ட மருத்துவமனைகள் என 64 அரசு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுவரும் அவசர கால சிகிச்சை மையங்களுக்கு, நவீன மருத்துவக் கருவிகள், 21 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 25

8. காச நோயாளிகளுக்கு சிறந்த ஊட்டச்சத்து வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, நடப்பாண்டில் 96 ஆயிரத்து 200 காச நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவு 20 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் நலன் காக்கும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் "மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மையம்" ஒன்று 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. நடப்பாண்டில், காஞ்சிபுரம், நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்டங்களில் செயல்பட்டுவரும் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில், மாணவியர் விடுதிகள் 20 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவ இயக்குநரகத்தின்கீழ், 12 அரசு துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சிப் பள்ளிகளின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், நடப்பாண்டில் எழும்பூர், பூவிருந்தவல்லி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 இடங்களில் உள்ள துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு, 17 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் அறிவித்துள்ள இந்தத் திட்டங்களால் அரசு மருத்துவமனைகள் மேலும் சிறப்பாகச் செயல்பட்டு, ஏழை எளிய மக்கள் உயர்தர மருத்துவ சேவை பெற வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இன்றைக்கு தமிழகத்தினுடைய